# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 கன்னி (30-9-1989) ஓர் உருபா (இதழ் எண்: 129)

# மொழி, இன, நாட்டு உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப் படுகின்றன!

## தமிழகத்தின் எந்த இயக்கமும் இதற்குப் போராட முன் வரவில்லை!

## தமிழ்நாட்டு அரசியல் தலைமை, இங்குள்ள எல்லா நிலைகளையும் அடக்கித் தன்னாளுமை பெறவே பாடுபடுகிறது!

### அரசியல் முயற்சிகள் தேவையில்லை; இனவியல் முயற்சிகளே தேவை! இனநலமே எதனினும் பெரிது!

இதை மக்கள் உணர்ந்து எழுச்சியுற்றுப் போராட முன் வர வேண்டும்; அப்பொழுதுதான் தமிழினம் உய்வு பெறும்!

**அதுவரை வரும் எத்தகைய அரசியல், பொருளியல், வாழ்வியல், வரலாற்றியல், பண்பியல், இலக்கியவியல் பிற அனைத்தும் பயனற்றவையே!**

நம் தமிழினத்தின் நிலை வரவரக் கேடடைந்து கொண்டே போகின்றது. இந்திராவினால் எத்தனை-யெத்தனைத் தொல்லைகளை இத் தமிழினம் அடைந்ததோ, அவற்றை விட இன்றைய தலைமையமைச்சர் இராசீவால் இத்தமிழினம் மிக மிகச் சீர்கேட-டைந்து வருகின்றது. தாய்த் தமிழகத்தில் உள்ள தமிழினம் மட்டுந்தான் இவ்வாறு இராசீவால் தொல்லையுறுகின்றது என்றில்லை. தமிழீழத்தில் உள்ள ஈழத்தமிழர்களும் ஒவ்வொரு நாளும் இவரால் படும் தொல்லைகளையும் துன்பங்களையும் உயிரிழப்பு-களையும் உலகமே அறிந்து அவற்றுக்கு மாற்றாக ஒன்றும் செய்யவியலாமல் கையற்று நிற்கின்றது.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

# பறம்பை அறிவன் பக்கர்!

## 1. உரிமை என்பது கிளிப்பேச்சா?

ஆயிரம் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாலும், ஒரு துண்டறிக்கை தூண்டும் உணர்வுகளைச் சில நேரம் அவற்றால் பெற முடிவதில்லை!

1983-ஈழப்புரட்சி வரலாற்றில் மறக்க முடியாத ஆண்டு. போராளிகள் அன்று சிந்திய குருதிகளிலிருந்து வீறு பெற்றெழுந்தார்கள்-மூவாயிரம் கோடிக்கு மேல் உருபாக்களைக் கொட்டி இந்தியா 'அமைதி'யை இழந்து நிற்கிறது.

புதிய போர்ப்பறை முழக்கம், 'தேசிய இன விடுதலை'! இதனை உலகம் வரவேற்று நிற்கிறது! கோர்ப்பசேவ், கூட்டமைப்பில் தேசிய இனவுரிமைகளைப் பெற்று விடலாம் என்கிறார். ஆனாலும், எழுச்சியைக் கொண்ட தேசிய இனம், பேச்சுரைகளில் நம்பிக்கை பெறவில்லை!

இராசீவ் 'கொடு நெறியாளன்' என்ற 'பழி' சுமந்து நிற்கிறார். கண்ணீரில் பிறந்த கதை, பாவியம் ஆனது; போர்ப்பரணி கேட்கிறது. தலைமைகளை முடிவுக்கு வரும்படி வரலாறு கட்டாயப் படுத்துகிறது.

படைவீரனின் மூச்சு......? "ஐயோ, நாம் ஏன் இந்தப் போர்களத்தில் நிற்கிறோம்? யாருக்காக நிற்கிறோம்?"

"வயிற்றுக்காகவா...? வாழும்
நாட்டுக்காகவா?"—சிந்திக்கிறான்!
'பனிமலை எனது...
பாலைநிலம் எனது...
அலைவீசும்குமரியின் ஆழம் அறிந்தவன் நான்,
வாழ்ந்த வுரிமை போனது;
வாழும் உரிமையை விடமாட்டோம்'.

இதுதானே தமிழனின் வேட்கை.

'திரையரங்கக் கட்டணம் குறை...
வைகை ஆற்றில் பாலம் போடு...
நெய்வோர் கூலியைக் கூட்டு ..
நூல்விலை உயர்வைக் கட்டுப்படுத்து'

இப்படி ஆயிரம் கோரிக்கைகள். அத்தனையும் 'மக்களை விட்டு மீறிப்போன அவலங்கள்'! மக்களதிகாரம் பெறல் வேண்டும்!

ஊழல் ஊற்று இந்தியா - இதில்
உருப்படுமா தமிழகம்!
காலம் எல்லாம் ஏவல்புரியக்
கன்னித் தமிழரா வேண்டும்?
நிலம் உழுபவனுக்கில்லை. - தமிழ்
நிலம் தமிழனுக்கில்லை.
எண்ணிப் பார்ப்பதும் கூடாதா?
உரிமை என்பது 'கிளிப்பேச்சா'?

## 2, அறிவியல் சார்ந்த எண்ணமே உரிமை!

தேசிய இன எழுச்சி பற்றிய கருத்தோட்டம் பெருகியுள்ள நேரம். பஞ்சாபில், அசாமில், கூர்க் நாட்டில், தமிழகத்தில், தெலுங்கு தேசத்தில் எனத் 'தேசிய இனச்சூடு' பரவியுள்ளது. இதனை, நம் நாட்டுப் பொதுமைக் கட்சிக்காரர் சிலர், 'பிளவுணர்ச்சி, பிரிவினைப் போக்கு, வன்முறையாட்டம்'' என்று கருத்தறிவிக்கின்றனர். இலெனின்... **"தேசிய இனச் சிக்கலில் நாம் இதுவரையும் செலுத்தியிருப்பதைக் காட்டிலும் அதிகக் கவனம் செலுத்துவது நமது கட்டாயக் கடமையாகும்..."** என்று கூறியுள்ளதை இவர்கள் மறந்து விட்டார்கள்; அல்லது மறைத்து விட்டார்கள் என்றே கூறுதல் வேண்டும்.

நாம் மக்களின் வாழ்க்கையில் அக்கறை கொண்டாலன்றி நம் 'எண்ணப்' போக்கில் உண்மையும்,தெளிவும், ஒளியும் தோன்றப் போவதில்லை.

'இந்தி'யைப் பரப்ப ஒரு தனி முயற்சி வேண்டாம். 'தமிழை' வளர்த்திடப் 'பால்' ஊற்றவும் வேண்டாம். அந்தந்த மொழி பேசும் மக்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டியல் கருதி கூத்தும் முயற்சியும், போராட்டமுமே அந்தந்த மொழி முன்னேற்றத்திற்குப் பரவுதலுக்கு இணக்கத்திற்கு, கற்றலுக்கு உதவ முடியும்.

அறிவியல் சார்ந்த எண்ணப் போக்கினை உரிமையுணர்வுடையவராலேயே பெறல் முடியும்.

கல்வியுரிமை, வேலையுரிமைப் போராட்டங்கள் வேகப்படும் போது, அவ்வுரிமை மறுப்புக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப் படுவார்கள் - மக்கள் அவர்களை வரலாற்றில் கறைபடிந்த வரிகளில் பதிவு பண்ணி வைப்பார்கள்.

## 3. உழவர்களை ஒன்று படுத்துவோம்!

"உழவர்கள் நாட்டின் முதுகெலும்பு. ஆனால், அவர்கள் ஓர் ஆற்றல் மிக்க அமைப்பாக இல்லை; போராடவில்லை. இந்த அவலம் தொடர்கின்றதே,'' எனப் புலம்புகின்ற 'பொதுமைக் கட்சி' அறிவிப்பு ஒன்றினைக் கண்டேன்.

உழவர் அமைப்பை விடத் தொழிற்கழகம் கட்டி வேலை செய்வதிலேயே 'பொதுமைக் கட்சிகள்' ஆர்வம் காட்டுகின்றன. காரணம்; 'திரட்டப் பட்டவரிடையே' ஓரமைப்புக்கான வேலையையும் செய்யலாம்; தங்களுக்கான 'தனி அமைப்பு, ஒன்றினை 'உள்முகமாகக் கட்டி' உடைக்கவும் செய்யலாம்!

ஆனால், உழவர்கள், சிதறியும், உதிரியாகவும் கிடப்பதாலும், பல்வேறு மேல்கீழ் அழுத்தம், தாக்குதல்களுக்கு ஆளாகியிருப்பதாலும் அவர்களை

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராசீவ் தமிழினத்தைப் பொறுத்த அளவில் மிகக் கரவாகவும் பழி வாங்கும் நோக்கத்துடனும், இவ்வினத்தையே அழித்தொழிக்கும் குறிக்கோளு-டனும் நடந்து கொள்வது வெளிப்படையாகவே தெரிகிறது. பொதுவாக இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களின் தனித்தன்மைக-ளையுமே தம் சூழச்சியான அரசியல் நடவடிக்கை-களால், திட்டங்களால் அழித்தொழித்துவிட்டு, ஆரிய இனக் கலைப் பண்பாடுகளையே பெரிதும் வளர்த்தெடுத்து நிலைப்படுத்துகிறார். எனினும், பல்லாற்றானும் சிறந்து விளங்கும் இத் தமிழ்ப் பேரினத்தின் அனைத்துத் தனித் தன்மைகளையும் பிற யாவற்றினும் மேலாக நேரிடைத் தாக்குதலால் அச்சு அடையாளமின்றித் தரையோடு தரையாக மண்ணோடு மண்ணாகவே தேய்த்து ஒன்றுமில்லா-மல் செய்துவிடப் பார்க்கிறார். இதை அவரால் செய்ய முடியுமோ முடியாதோ, ஆனால் அவர் இறுதி முயற்சியாக உறுதி கொண்டு செய்ய முற்-பட்டு விட்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

தமிழினத்தின் மொழி, இன, நாட்டு உரிமைகள் படிப்படியாக இராசீவால் பறித்தெடுக்கப் படுகின்-றன. தமிழ்மொழியை மூன்றாந்தர நாலாந்தர மொழியாகவே நடுவணரசு மதிப்பிடுகிறது. உலகின் மூல முதல் மொழியாகிய தமிழ், ஏதுமற்ற இந்தி மொழிக்கு மிக மிகத் தாழ்வான மொழி-யாகவே மதிக்கப் படுகிறது. உருப்படியான ஒரு சிறப்பையும் கொண்டிராத, இலக்கண வழுக்களும் மிகப் பிந்திய இலக்கியங்களையும் கொண்டுள்ள இந்தி மொழிக்கு ஆண்டுக்கு நூறு கோடி உருபா செலவிட்டால், இலக்கிய இலக்கணச் செழுமையுற்று விளங்கும் நம் தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு ஒரு கோடி உருபாவே செலவிடப் பெறுகிறது. அதுவும் அந்தத் தமிழையும் பார்ப்பனத் தமிழாகவே வளர்த்தெடுக்க விரும்புகிறது.

இனி, இன நிலையில் நம் இனத்தவர்கள் தமிழர் என்று தங்களை எழுத்தளவில், பள்ளிச் சான்றிதழ், ஒப்போலைப் பதிவுகள், பிற அரசுப் பதிவேடுகள், எல்லைக்கடவுகள் முதலியவற்றில் பதிந்து கொள்ளவும் உரிமையற்றவர்களாகவே உள்ளார்கள். வேறு பிற திராவிட மொழியினத்-தவர்கள், தங்களைத் தெலுங்கர், கன்னடியர், மலையாளர், குசராத்தியர், வங்காளியர், மராட்டியர் என்று தங்கள் இனத்தின் பெயர்களை அரசுப் பதி-வேடுகளில் பதிவு செய்து கொள்ள உரிமை இருக்-கும் பொழுது, தமிழர் மட்டும் **'இந்து'** என்னும் மதந்தழுவிய பெயரையும், **பிள்ளை, முதலி, படை-யாட்சி, செட்டி, கவுண்டர்** என்னும் சாதி தழுவிய பெயரையும் மட்டுந்தாம் பதிவு செய்து கொள்ள முடியும் என்றால், அஃதென்ன கொடுமை! ஏன் தமிழர் மட்டும் தங்கள் இனப்பெயரைப்பதிவுசெய்து கொள்ள உரிமையில்லாதவர்களாகவேண்டும்?

இனி, தமிழினத்தின், தமிழ்நாட்டின் சிறுசிறு உரிமைகளுக்காக ஏன் அவ்வப்பொழுது தில்லி-யரசை நாடிப் போக வேண்டும்? கல்வி, வணிகம், தொழிலமைப்பு, உணவு, இதழ் வெளியீடு போன்ற நூற்றுக்கணக்கான இன்றியமையாத தேவைகள் ஒவ்வொன்றிற்கும் கூட நடுவணரசை எதிர்பார்த்-துக் கையேந்தி நிற்கின்ற நிலை இன்னும் நமக்கு எதற்கு? நம் கலைகள், பண்பாடுகள் முதலிய அனைத்தின் மூலப் பெயர்களும் அழிக்கப் பட்டுப் பாரதக் கலைகள், பாரதப் பண்பாடுகள் என்று மாற்றாந்தாய்ப் பெயர் சூட்டி அழைக்கப் படும் இழி நிலை நமக்கு ஏன்? ஒவ்வொரு நிலையிலும் தமிழர் என்ற தனித் தன்மையை நாம் இழந்து ஆரிய மயப் படுத்துகிறோம். அல்லது இந்திக்காரர்க்கு நாம் அடிமைகள் என்று முத்திரை குத்தப் படுகின்-றோம்? இவ் விழிநிலையை இன்னும் எத்தனைக் காலத்திற்கு நாம் பொறுத்துக் கொள்வது? எங்குப் பார்த்தாலும் இந்தி, சமசுகிருதம், ஆரியம், முதலாளியம்—என்று மாற்றார்களின் மொழிக்கும் இனத்திற்கும் ஆளுமைக்கும் என்றென்றுமே தலை-யசைத்துக் குட்டிக் கரணம் போட்டுக் கொண்டி-ருக்க நாம் நிலையான அடிமைகளா? உரிமை வாழ்க்-கையை முதன் முதல் அமைத்துக் கொண்டவரும், அவ்வுரிமையை உலக மக்களுக்கு முதன் முதல் கற்றுக் கொடுத்தவரும் தமிழரில்லையா? வரலாறு அவ்வாறிருக்க, இன்று முழுப் பச்சைப் பார்ப்பனீ-யத்திற்கும், வடநாட்டு முதலாளியத்திற்கும் ஏன் நாம் கால் கை பிடிக்கவும், கண்காணிகளாகவும் வேண்டும், தன்மானமற்ற குமரி அனந்தன்களும், திண்டிவனம், வாழப்பாடிகளும், ம. கோ. இரா. அடிமைகளும் அவ்வாறு இருக்க விரும்பினால் தன் மானம் மிக்க நாமும் ஏன் அவ்வாறு இருக்க வேண்டும்?

இவ்விழிவு நிலைகளை ஒழித்துக் கட்டுவதற்கு இங்குள்ள எந்த இயக்கமும் போராட முன் வர-வில்லை; முன் வராது. எனவே, தன்மானமும், இனமானமும் மிக்கவர்கள்தாம் ஒன்று கூடி உயர்த்தெழுந்து உரக்கக் குரல் கொடுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட அவர்களைப் பிரிவினைக் காரர்கள்,தேசியப்பகைவர்கள்,வன்முறையாளர்கள், தீய ஆற்றல்கள் என்றெல்லாம் வல்லதிகாரக் குற்றஞ்சாட்டிப் பற்பல துன்பங்களுக்கு ஆளாக்க-லாம். இருப்பினும் இக் கொள்கைக்காக மக்கள் போராடியே ஆக வேண்டும்.

தமிழ்நாட்டு அரசியல் தலைமை (அதை எவர் கைப்பற்றினாலும்) இங்குள்ள எல்லா வகையான எழுச்சி நிலைகளையும் அடக்கித் தன்னாளுமை பெறவே பாடுபடுகிறது! சில நேரங்களில் சில நிலைகளில் அது துணிவு பெற்று ஒருவாறு நடு-வணரசைப் பேச்சளவிலாகிலும் எதிர்ப்பதுபோல் நடிக்கிறதென்றால் அல்லது நாடகமாடுகிற-தென்றால், அதுவும் தனக்கு வலிவு தேடிக்

Scanned with CamScanner

கொள்ளவோ தனக்குக் கிடைத்த பதவியை நிலை நிறுத்திக் கொள்ளவோ, அல்லது மறைமுகமாகத் தங்கள் விட்டுக் கொடுப்பு அல்லது இனக் காட்டிக் கொடுப்பு நிலைகளுக்குப் பொருளியல் நிலையில் நன்றி தேடிக் கொள்ளவோதான் இருக்க முடியும். இத்தகையவர்களுக்கு அழிக்கப் பட்டு வரும் தமிழினத்தைப் பற்றியோ, பெருமை குறைக்கப் பட்டு வரும் தமிழ்மொழியைப் பற்றியோ, நாளுக்கு நாள் பறிபோய்க் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு உரிமைகளைப் பற்றியோ அக்கறையோ கவலையோ எவ்வாறு இருக்க முடியும்?

ஏதோ அரசியல் ஆளுமை உரிமைகளுக்காகப் போராடுவதாக இங்கு ஆட்சிக்கு வரும் மாநில அளவிலான கட்சிகள் அவ்வப் பொழுது பெயர் பண்ணிக் கொண்டு, விளம்பரம் தேடிக் கொள்வது-தான் மிச்சம்! மற்றபடி, இங்குள்ள தன்மானத்(!) தமிழர்கள் இராசீவுக்கு ஆட்சியரண் சேர்ப்பதற்குப் பேரம் பேசும் தரகு முதலாளிகளாகவேதாம் இருக் கிறார்கள்.

இதுவரை இங்கு ஆட்சிக்கு வந்த, வரும் அதிகாரக்காரர்கள் செய்த அரசியல் முயற்சிகளால் அப்படி என்ன நன்மை ஏற்பட்டு விட்டது? இவர்கள் இங்குள்ள அரைக்காலே வீசம் ஆளுமை உரிமைக்காக நடுவணரசுடன் போராடும் அரசியல் முயற்சிகள் தேவையே இல்லை. ஒட்டு மொத்தமான இன நல முயற்சிகளே தேவை! இன நலமே எதனினும் பெரியது! வலியது! எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படையானது!

*''மன நலம் நன்குடையராயினும், சான்றோர்க்கு இன நலம் ஏமாப்பு உடைத்து'' ''மன நலத்தி-னுங்கும் மறுமை; மற்றஃதும் இன நலத்தின் ஏமாப் புடைத்து''*—என்பன நம இனக்காப்பு நூலாகிய திருவள்ளுவம் நமக்குக் கற்பிக்கும் நெறி முறைகள்.

''இனம் நலமாக—வலிவுள்ளதாக—இருக்கும் நிலையில்தான, அது, நம் மன நலத்தால் பெற்ற—பெறுகின்ற அறிவு நிலைகள் ஆகிய இலக்கியம், இலக்கணம், மொழி, வாழ்வியல், அறிவியல், முதலியவற்றையும், மன நிலைகள் ஆகிய கலை, பண்பாடு, ஒப்புரவு, உலகியல், பொதுமை முதலிய-வற்றையும், அறநிலைகளாகிய சமன்மை, பொது-வுடைமை, அரசியல், அறவியல் முதலியவற்றையும் நாம் கட்டிக் காத்துக் கொள்ள முடியும்'' என்பது முதல் குறள் நெறியின் திரள் கருத்து.

அதே போல், ''மேற்கூறிய மன நலத்தின் அனைத்துக் கூறுகளும் தாம் ஓர் இனத்தின் எதிர்-கால வளர்ச்சிக்குப் பயன்படுவன ஆகும்; மற்று, அவைதாம் ஓர் இனத்திற்கு நலமாகவும், காப்பாக-வும் இருக்கும்'' என்பது இரண்டாம் குறள் நெறியின் அடைவுக் கருத்து!

இவ்விரு திருக்கூற்றுகளால் நாம் பெறப் படுபவை என்னென்றால், ஓர் இனத்தின் முழு நலமே, வலிவே, அவ்வினத்தின் அனைத்து அறிவுக் கூறுகளுக்கும் காப்பாக இருப்பதுபோல், அவ்-வறிவுக் கூறுகளுமே அவ்வின வலிவுக்குக் காப்-பாக அமைவன ஆகும். நம் கலை, பண்பாடு, நாகரிகம், மொழி, இலக்கியம் முதலியவை நம் இனத்துக்கு வலுவூட்டக் கூடியவை. ஆனால் அவை இற்றை வடநாட்டுப் பார்ப்பனீய முதலாளிய இராசீவ் அரசால் அழிக்கப் படுகின்றன. அதே போல் நம் இனத்தின் வலிவே-நலமே-நம் கலை, பண்பாடு, நாகரிகம், மொழி முதலியவற்றுக்குக் காப்பாக விளங்கக் கூடியன. அந்த இனமும் இன்றைய ஆரியமயத் தில்லியரசால் அழிக்கப் படுகிறது. இவ்வாறு நம் இனத்தின் காக்கும் பொருளும், காக்கப்படும் பொருளும், மற்றோர் இன-மாகிய நம் பகை இனத்தால் அழிக்கப் படுகையில் நம் எதிர்காலமே இருண்டு வருகிறது என்பதை நாம் உணர வேண்டாவா?

இதை நம் மக்கள் உணர்ந்து எழுச்சியுற்றுப் போராடித் தடுத்து நிறுத்த முன்வர வேண்டாமா? முன் வருதல் வேண்டும். அப்பொழுதுதான், நம் பழம்பெருந் தமிழினம் உய்வு பெறும். அதுவரை நாம் எதிர்கொள்ளும் எத்தகைய அரசியல், பொரு-ளியல், வாழ்வியல், வரலாற்றியல், பண்பியல் ஆகியனவும் மற்றும் பிற அனைத்து நலன்களும் பயனற்றனவே, நிலையற்றனவே ஆகும்! O

---

## மே நாள்!

மேநாள் கொண்டாட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசு மே நாள் விடுமுறை அளித்துப் பெருமை பெற்றது. நடுவண் அரசை நோக்கி 'எங்களுக்கெங்கே மே நாள் விடுமுறை?' என்ற வினவும் எழுந்துள்ளது! மே நாளைத் 'தேசிய நாளாக' அறிவிக்கும்படி கேட்கிறார்கள். அடிப்-படையில் 'தொழிற் கழக' உரிமைக்காகப் போராட முடியாத 'அமைப்புகள்', சம்பள வேறுபாடு, அதிகக் கூலி, சமக் கூலி என்று 'கோரிக்-கை'களைக் கூட்டிக் கொண்டே வருகின்றன.

'போராடும் எங்களுக்குச் 'சாதி, மதம், மொழி, இனம், தேசம்' இல்லை'' என்கிற முழக்கத்தின் உரிய பொருளை நாம் புரிந்து கொள்ளவில்லை.

சாதிய ஒடுக்குமுறை, மத அடக்குமுறை, மொழி வல்லாண்மை, இன அழிப்பு, தேசங்களை அடிமைப்படுத்தல்—என்ற எந்தச் சிக்கலையும் கண்டு ஒதுங்காமல், போராடி ஒரு சமச் சீரான குமுகாய அமைப்பைக் கட்டியெழுப்ப உறுதி கொள்ளும் நாளே 'மே நாள்' எனலாம்.

ஆனால் சில பொதுமைக் கட்சிகள், மொழி, இனம், 'தன் தீர்வு உரிமை'க்கான போராட்டங்களை' 'இந்திய ஒருமைப்பாடு' எனும் போர்வையில் மூடி வைக்க முயல்கின்றன. அவற்றின் முகத்திரை பொசுங்கி அவர்களின் கொடுமை முகம் அம்பல-மாவது உறுதி என்று கூறலாம். —அறிவன்

# செயலலிதா எனும் தீமை!

அரு. கோபாலன்

செயலலிதா! முன்னர் அவர் ஒரு நடிகை. நடிகர் சோபன்பாபுவுடன் உறவு வாழ்வு நடத்திய அழகி; எம். சி. ஆரின் வைப்பாட்டி.

இன்றோ, அவர் அசைக்க முடியாத ஓர் அரசியல் பெருமகள்! 'அ. தி. மு. க.'வின் பொதுச் செயலாளர். தமிழகச் சட்டப் பேரவையின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்.

இத்தனைக்கும் மேலாக நடுவில் ஆளுங்கட்சியாகவும், தமிழகத்தில் தேசிய முன்னணிக்கு வெல்விளியா (சவாலா)கவும் விளங்கும் பேராயக் கூட்டணியின் தலைவர்.

யார் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளா விட்டாலும் முதலமைச்சர் கலைஞருக்கும் மாற்றாக விளங்கக் கூடிய நிழல் முதலமைச்சர்.

எனவே, இப்போது அவரை இழிப்பதோ பழிப்பதோ மக்களாட்சி முறைமையையே பகடி (கேலி) செய்வதாகும். அத்துடன் பெண்ணுரிமையை ஒப்புக் கொள்ள மறுக்கும் ஒரு பிற்போக்குத்தனமுமாகும்.

-இப்படியாகப்பட்ட சிந்தனையோட்டத்துடன், அவர் எப்படி அரசியலுக்கு வந்தார்? எப்படி அரசியல் பண்ணுகிறார்? என்பதைப் பற்றிக் கவலையே படாமல், அவரைத் தாங்கள் ஆதரிப்பதுடன், மற்றவர்களும் ஆதரித்தேயாக வேண்டும் என்று முரண்டு பிடிப்பவர்கள்-ஞாயக்கருத்துப் படிப்பவர்கள் தமிழகத்தில் நிறையவே இருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரை அவர் ஒரு பெண் என்பதற்காகவோ, முன்னாள் நடிகை என்பதற்காகவோ அவரை 'ஒரு தீமை' என்று சொல்ல வரவில்லை.

தமிழின நலன்; தமிழ்நாட்டு உரிமை என்கிற நோக்கில் பார்க்கிறபோது,செயலலிதா வந்த வகையும், வாழும் வகையும், தீமையால் வழிகாட்டும் வகையும், தீமைக்காக, தீமையாக நடக்கும் ஒரு தீமைதான் என்பதினாலாகும். நன்மையை - உண்மையைத் தமிழ்நாட்டை விட்டே துரத்திவிடும் என்பதினாலாகும்.

செயலலிதாவை வளரவிடுவதில் உள்ள தீமையை உணர்வதில் கருப்பையா (மூப்பனாருக்கு) இருந்த அக்கறை கூட கலைஞருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இன்று வாழப்பாடி இராமமூர்த்தி நடந்து கொள்வது போல அன்று கருப்பையாவும் நடந்து கொண்டிருப்பாரேயானால், ஒரு வேளை கலைஞர் ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப் பட்டாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். (கலைஞர் அரியணை ஏறியதால் தமிழுக்கும், தமிழினத்துக்கும் எம்.சி.ஆர். ஆட்சியிலிருந்ததைவிட எள்முனை முன்னேற்றமும் ஏற்படவில்லை. என்பது வேறு செய்தி.)

ஒருவேளை எம்.சி.ஆர். மறைந்த பிறகு தமக்கு நிகரான போட்டி யாருமில்லை என்று கலைஞர் நினைக்கிறார் போலும்!

தகுதி, திறமை, அறிவு, ஆற்றல் என்று பார்த்தால், எம்.சி.ஆர். கூட கலைஞருக்குப் போட்டியில்லைதான். ஆனால் மக்களின் ஆதரவைத் திரட்டி, அரசியல் வல்லாண்மையைக் கைப்பற்றுவதில் அவர் கலைஞரை விஞ்சியே நின்றார். அந்த அளவுக்கு எம்.சி.ஆரை ஊக்கிவிட்டவரும் கலைஞர் தாம். இன்றைக்கு அதே இடத்தில் செயலலிதா நிற்கிறார் என்பதையோ, அறிந்தோ அறியாமலோ கலைஞர் அவர் வளர்ச்சிக்கும் துணை போகிறார் என்பதையோ மறுக்க முடியாது.

எம்.சி.ஆர். மறைவையொட்டி அ. தி. மு. க. கலகலத்துப் போனது. செயலலிதா அணி, தான் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறுததும், சானகி அணி படுதோல்வியடைந்ததும் பெரும்பாலான 'அ.தி.மு.க.' காரர்களை தி.மு.க.வின் கதவுகளை வலிய வந்து தட்டுமாறு செய்தன.

திராவிட வழிமுறை யெல்லாம் ஒன்றாகச் சேர வேண்டுமென்ற வேண்டுகோளுடன் அவர்களை யெல்லாம் கலைஞர் அரவணைத்துக் கொண்டிருப்பாரானால், நாடகமாகமுடிந்து விட்ட செயலலிதாவின் அரசியல் துறவறம் உண்மையாகவே முடிந்திருக்கும்.

ஊரையே அடித்து உலையிலே போட்ட வீரப்பன் போன்ற ஊழல் பெருச்சாளிகளை உள்ளே விட்டால், தி.மு.க.வின் தோற்றம் சிதையாதா என்று கேட்கலாம்.

இன்றைய அரசியலில் எந்தக் கட்சிக்காரனும் ஊழலுக்கு நெறிவிலக்கல்ல என்பதை முதலில் ஒப்புக் கொண்டாக வேண்டும். அடுத்தது கட்சியில் சேர்வதற்கெல்லாம் முகாமை கொடுத்துத் தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. ஏன்? ஏற்கனவே கட்சியில் இருப்பவர்களுக்கு மட்டுமென்ன? எல்லாருக்குமா முகாமை தரப்படுகிறது? எத்தனையோ ஈகமற்றவர்கள் இன்னும் தி.மு.க.வில் இருட்டடிப்புக்கு ஆளாக்கப்படத் தானே செய்கிறார்கள்?

ஆகவே, தி.மு.க.வில் சேரவிரும்பிய 'அ.தி.மு.க.'வினரை யெல்லாம் கலைஞர் அன்றே

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# அமிழ்தன் கட்டுரைக்கு விளக்கமும்-மறுப்புக் குறிப்பும்!

-அதியமான்.

''குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை... ! தமிழ்நாடு விடுதலைப் படையும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பலும்'' என்ற தலைப்பில் திரு. அமிழ்தன் எழுதிய தொடர் கட்டுரைக்கு திரு. இ. இராசமாணிக்கம் மயிலாடுதுறை அவர்கள் எழுதிய 'இரட்டை வேடமா' (த. நி. 125) என்ற தலைப்பு மடலும்; 'நம்பூதிரித்தனமாகவே' என்ற தலைப்பில் (த. நி. 125) வெளியான திரு. அரு. கோபாலன் அவர்களின் மடலும் ஒரு விழிப்புணர்ச்சியையும் கட்டுரையைத் திரும்பப் படித்துத்தெளிவு கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அத்தோடு இதழ் ஆசிரியர் குறிப்பும் இக் கட்டுரையை எழுதும் இன்றியமையாமையைத் தூண்டிற்று.

*குண்டு வெடிப்புக்கான விளத்தம்:*

குடமுருட்டிப் பாலத்தகர்ப்பு நிகழக் கரணியமாக அமைந்த ஒரு சூழ்நிலை தஞ்சையை நெற் களஞ்சியமாக ஆக்கிவரும் காவிரி நீர் பங்கீட்டுச் சிக்கல் எனக் குறிப்பிடுகிறார். அதே ஆசிரியர் அக் கட்டுரையில் ஓரிடத்தில் 'காவிரிநீர் பங்கீட்டுச் சிக்கல் மட்டும் இதற்குக் கரணியமாக எடுத்துக் கொள்ள முடியாது' எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆக, இருவகையான கரணியங்களைக் குறிப்பிடுவதால், காவிரிநீர்ச் சிக்கல் மட்டும் குண்டு வெடிப்புக்குத் தகுதியான கரணியம் எனக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், இக்குண்டு வெடிப்பில் தமிழ்நாடு விடுதலைப்படை, இந்தியத் தமிழர் விடுதலை இராணுவம், தமிழ்நாடு தமிழர் விடுதலை இயக்கம் போன்ற இயக்கங்கள் பின்னணியாக இருந்தனவாய்ச் செய்திகள் பரப்பப்பட்டனவாகக் கருத்துகள் வந்தன எனக் கட்டுரை ஆசிரியர் குறிக்கிறார். இத் தொடர்ச்சியால் தமிழ்நாடு விடுதலைப்படை தன்னை வெளிக்காட்டிக் கொண்டு, தனித்தமிழ் நாட்டிற்காகப் போராடப் போவதாகவும் அறிவித்ததாயும் கட்டுரை கூறுகிறது.

எனவே குண்டுவெடிப்பிற்குக் கரணியம் தனித்தமிழ் நாட்டுக்காகப் போராடுவதற்காகத் தொடக்கப் போராட்டமாக இந்தக் குண்டுவெடிப்பு நடந்துள்ளது என்றே கொள்ள முடிகிறது. ஏனென்றால், இந்நீர்ச் சிக்கல் இன்று நேற்றுத் தொடங்கியதில்லை. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் மன்னர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே தொடர்கிறது எனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பதால், குண்டு வடிப்புக் காவிரிநீர்ச் சிக்கலை நடுமையாகக் கொண்டு நிகழவில்லை என்று பொருள்படுகிறது. ஆனால் தனித்தமிழ்நாட்டுப் போராட்டமே இதற்குத் தொடக்க நிகழ்வாக அமைந்திருக்கிறது.

மேலும் காவிரி நீர்ச் சிக்கலைத் தீர்விற்குக் கொண்டுவர குண்டு வெடிப்பு எவ்வகைப் பயனையும் தராது. ஏனென்றால் காவிரிச் சிக்கலுக்குப் போராடவேண்டித்தாக்கமுற்ற உழவர்களே முன்வர வேண்டும். உழவர்கள் மட்டும் காவிரிநீர்ச் சிக்கல் தீரும்வரை உழவுத் தொழில் செய்வதில்லை எனக் கலப்பையைச்சட்ட அவைச்சுவர்களில் சார்த்திவிட்டால் போதும், சிக்கல் விரைவில் தீர்க்கப்படும். இதற்காகக் குண்டு வெடிப்பு ஏன்? குண்டு வெடிப்பில் தொடர்பு கொண்டதாய் விடுதலை இயக்கப் போராளிகளைச் சிறை செய்தபோது உழவர்கள் எதுவும் பேசவில்லையே. எனவே குண்டு **வெடிப்புக்கும் காவிரி நீர்ச்சிக்கலுக்கும் முடிச்சுப் போடுவது தமிழ்நாடு விடுதலைப் போரைத் திக்குத் திருப்புவதாய் அமைந்து விடும்.**

*காவிரி நீர்ச் சிக்கல் இனச்சிக்கலன்று:*

கருநாடக நாட்டு மக்களும், தமிழ்நாட்டு மக்களும் இனத்தால் பொதுப் பெயரால் திராவிடர். தந்தை பெரியார் கூட தமிழ்மொழியைத் தெற்கே உள்ளவன் ஒரு மாதிரியும், சென்னையிலுள்ளவன் ஒரு மாதிரியும் பேசுவதைப் போலத் தமிழைக் கன்னடியர் ஒரு மாதிரியும் தெலுங்கர் ஒரு மாதிரியும், மலையாளிகள் ஒரு மாதிரியும், பேசுகிறார்கள் எனக் கொள்ளலாம் எனக்கூறுகிறார். அவ்வடிப்படையில் கன்னடியரும் தமிழர்களே எனக்கூற வேண்டும். அம் மக்களின் தோற்றம், நடை, உடை முதலியன கூட ஒற்றுமையாக உள்ளன. இருநில மக்களும் ஒரே இனந்தான். தமிழின் உணர்வின் அடிப்படையில், கன்னடியரான தந்தை பெரியார் தாம், தமிழர்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டினார். இனவெறிக் கன்னடியர் என்றிருந்திருந்தால் இச்செயல் நடந்திருக்காதே. இதனை மறந்து விடக் கூடாது. இவர்களைப் பிரிப்பது வடநாட்டு ஆட்சியாளர்களே, பிரித்தாளும் சூழ்ச்சி என்றே கொள்ளவேண்டும். ஆகவே காவிரி நீர்ச்சிக்கல் வயல்களுக்குள் தண்ணீர்ப் பாய்ச்சுவதில் ஏற்படும் சிறு சிக்கலே, அதனை இரண்டு மாநிலங்களும் பேசித் தீர்த்துக் கொண்டால், தீர்வு நல்லதாக முடிந்து விடும். ஆனால் திரு. அமிழ்தன் கூறுவதுபோல இது ஒரு தேசியச் சிக்கல் ஆகாது என்பது உண்மையே. மாநிலங்களை ஒன்றுக்கொன்று எதிரிகளாகக் காட்டி ஒற்றுமை

ஆகிவிடாதபடி இருவருக்கும் மூக்குக் கயிற்றைத் தேசியம் என்ற பெயரால் மாட்டித் தன் விருப்பப்படி ஆட்டிவைக்கவே இந்தத் தேசியம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தேசியத்தின் மீதுதான் குண்டு பாய்ந்தது. ஏனென்றால் தேசியத்தின் பெயரால் நடுவணரசின் துணைக் கொண்டே கருநாடக அரசு பல அணைகளைக் கட்டுகிறது. தேசியம் உடைந்து விட்டால், கருநாடக அணையும் உடைந்து விடும். இரு நாட்டினரும் கைக்குலுக்கிக் கொள்ளுவார்கள். இக் கை குலுக்கலை நிகழ்த்தத்தான் தனித்தமிழ்நாட்டு விடுதலை கோரி தேசியத்திற்கு வைத்த குண்டு, பாலத்தில் வெடித்தது.

## நடுவண் அரசுக்குள் அசையும் மாநில அரசு:

நடுவண் வல்லாண்மை அரசு என ஓர் அமைப்பு இந்தியாவில் இருக்கும் வரை, எவர் தமிழ் மாநிலத்தில் ஆட்சி செலுத்தினாலும், நடுவண் வடவர் ஆட்சிக்கு உட்பட்டே அசைய வேண்டும். மாநில அரசை நடத்தும் முதலமைச்சர் தலைமை அமைச்சருக்குத் தெரியாமல் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது. தஞ்சாவூர் கோவில் சுவர் மூச்சுவிட்டாலும், ஒன்றும் பேச முடியாது. வடவர் நினைத்தால் சட்டத்தைத் திருத்துவார்கள். புதிதாக இயற்றிக் கொள்ளுவார்கள். மாநில அரசின் அதிகாரங்களை கேட்பாரற்று கிடக்கும் பொருளை வழிப்போக்கன் எடுத்துக் கொள்வதைப் போல, நடுவண் அரசு எடுத்துக் கொள்ளும். ஏன் என்று கேட்டால் கள்ளக்காமி கருக்கலைப்புச்செய்வதுப் போல் மாநில ஆட்சியைக் கலைத்து விடுவார்கள். ஏனென்று எவரும் கேட்க முடியாது. ஏனென்றால் அதிகாரங்கள் முழுவதும் தில்லியில் குப்பைபோலக் குவிந்து கிடக்கின்றன. எனவே தமிழ் மாநிலத்தைத் தமிழன் ஆண்டாலும் வடவருக்குக் கட்டுப்பட்டவர்களே.

இந்த நிலையை உணர்ந்து சிந்தித்தவர்களேத் தனித்தமிழ் நாட்டு உரிமை மீட்புக்காகப் போராட முயற்சி செய்தார்கள்; இன்னும் முயலுவார்கள். நடுவண் அரசை ஆளும வடநாட்டார் கழுதை தேய்ந்து கட்டெறும்பான பேராயக் கட்சிக்கு இந்திரா பேராயக் கட்சி என ஒரு குடும்பப் பெயரை வைத்துக் கொண்டு அந்தக் குடும்பமே இந்த நாட்டை வல்லதிகாரஞ் செய்து கொண்டு கொள்ளையடித்துக் கொண்டு இருக்கிறது. அ்து ஒரு மாநிலக் கட்சியாகும் அளவில் தேய்கிறது. அக்கட்சி தன்னுடைய வலிமை குன்றக் குன்ற மாநில அதிகாரங்களை ஒரு வரைமுறை இல்லாமல் தன்வயமாக்கிக் கொண்டு மாநில முதலமைச்சர்களை அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது. தன்னுடைய உளவுப் படையைத் தூண்டி மாநிலங்களில் கலவரங்களைச் செய்யச் செய்து மாநிலங்களில் சட்ட ஒழுங்கு குலைவு ஏற்பட்டதாய்க் கரணியங்களைக் காட்டிச் சட்ட அவையைக் கலைத்து விடுவார்கள். இதற்கு அஞ்சிய மாநிலங்களை ஆளும் முதல்வர்கள் நடுவண் அரசுக்கு அடிமைகளாகி விடுகின்றனர். அவ்வகை முழு அடிமையாக இருந்தவர் முன்னாள் தமிழக முதல்வர் ம. கோ. இரா. இவர் காலத்தில் நடுவண் அரசு எள் என்றால் போதும் எண்ணெயைக் கொண்டு கொடுத்தவர். அதனாலேயே அவர் உடல் நலமில்லாமல் இருந்தபோது இந்திரா, அவர் மகன் இராசீவ் ஓடி ஓடி வந்து உதவினார்கள். ம.கோ.இரா. மீது அன்பு கொண்டு அவ்வாறு செய்யவில்லை. அவர் வடவருக்கு ஏவல் காரராய் இருந்தமையாலேயே துணைநின்றனர். அது போன்று ஆந்திர முதலமைச்சர் என். டி. இராமராவ் மீது அருள் கூர்வார்களா? மாட்டார்கள். ஆனால் செயலலிதா மீது அன்புக் காட்டிப் பூச் செண்டை வழங்கிப் பல்லைக் காட்டுவார்கள்.

இப்படிப்பட்டச் சூழ்நிலைகளை எண்ணிப் பார்க்காமல் திரு. அமிழ்தன் அவர்கள் மாநில ஆட்சியைக் குறை கூறுகிறார். **இவ்வகைக்குறைகள் இருந்தே தீரும் தமிழ்நாடு தனியாகும் வரை. திராவிடர்கழக ஆட்சியைத் தமிழர் ஆட்சி எனக் கூறுவது தவறு?**

திரு. அமிழ்தன் அவர்கள் இந்தத் திராவிட(ர்)ங்களின் இழிந்த ஆட்சியையே தமிழரின் ஆட்சியெனவும் தன்மானத்தின் ஆட்சி எனவும், தமிழகத் திராவிட அரசியல் தரகர்கள் பிதற்றித் திரிவார்கள் (த.நி.120) எனக்கூறிச் சாடுகிறார். தமிழ்நாட்டையும் உள்ளடக்கிப் பேராயக்கட்சி ஆளும்போது பச்சைத் தமிழர் எனக் கூறும் காமராசு அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது, ‘சென்னை மாகாணம்’ என்றிருந்த தமிழகத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் வைக்க வேண்டும் என்று திரு. சங்கரலிங்கம் என்பார் சாகும்வரை உண்ணாநோன்பு இருந்து உயிர் விட்டார்கள். பச்சத்தமிழனுகக் காமராசு இருந்தாலும் நோன்பிருந்தவரின் உயிரைக் காக்கத் தமிழ்நாடு எனச் சென்னை மாகாணத்திற்குப் பெயர் வைக்கவில்லை. ஏனென்றால் தமிழினத்திற்கு எதிரிகளான வடவர் உச்சியில் இருந்ததால் காமராசு அவர்களால் முடியவில்லை. கரணியம் அவர் பேராயக்கட்சியின் முதல்வர்.

அதன்பிறகு திராவிடர் ஆட்சி, 1967-இல் அண்ணா தலைமையில் தமிழர் ஆட்சி அமைகிறது. உடன் 1967 இல் சென்னையைத் தமிழ்நாடு எனப் பெயரிட சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு 1969-இல் சென்னை மாகாணம் என்ற பெயர் தி.மு.க ஆட்சியில் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப் பட்டது. மக்கள் மகிழ்ந்தனர். பிற்பட்டோருக்குக் கல்வி, அலுவல் போன்றவற்றில் இட ஒதுக்கீடு, அவர்களுடைய நலன்களைக் கவனிக்கத்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக் கொண்டிருப்பாரானால், இன்று ஒன்று பட்ட 'அ.தி.மு.க.' அதனுடன் பேராயக் கூட்டணி என்ற நிலைமை உருவாகியிருக்காது.

அதைப்போலவே, செயலலிதாவின் விலகல் கடிதத்தைக் கைப்பற்றிய அன்றே அதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் அல்லது அந்த நடவடிக்கையையே மேற்கொண்டிருக்கக் கூடாது. அப்படியே 'அ.தி.மு.க.'வினரை திடீர் திடீரெனத் தளை செய்வதும் விடுவிப்பதுமான காவல்துறை விளையாட்டில் ஈடுபடுவதும் தேவையற்றதே. இது எம்.சி.ஆரோடு நம் அரசியல் ஈடுபாடும் முடிந்து விட்டது என்று ஒதுங்கத் தொடங்கிய 'அ.தி.மு.க., வினரை வலிய அக்கட்சியில் கொண்டுபோய்த் தள்ளுவதாகவே உள்ளது.

ஆக, செயலலிதா இன்று தி.மு.க. ஆட்சிக்கு ஒரு வெல்விளியாக (சவாலாக) எழுந்து நிற்கிறார் என்றால், அதில் பெரும் பங்கு செயற்பாடு கலைஞருடையதே. அவர் தி.மு.க.வுக்கு மட்டும் ஒரு வெல்விளியாக (சவாலாக) எழுந்து நின்றால் தாழ்வில்லை; தமிழின உரிமைக்கே - தமிழ்நாட்டின் வருங்காலத்திற்கே ஒரு சூளுரையாக உருவாக்கியிருப்பதால், அத்தீமையை வீழ்த்துவது தமிழினத்தின் பொதுக்கடமையாகிறது.

ஆம்; இலங்கையில் அமைதிப்படையென்ற பெயரால் ஏதுமறியாத் தமிழ் மக்களைக் கொன்று குவித்துத் தமிழீழ விடுதலைக்குத் தடையாக நிற்கும் இராசீவுக்குக் கைத்தடியாக விளங்குகிறார். இராசீவுக்குக்கை மட்டுமே தூக்கும் கொள்கையற்ற கூலிப்பட்டாளத்தை நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தமிழகப் படிநிகராளிகளாய்த் தில்லிக்கு அனுப்பச் சந்தை கூட்டியிருக்கிறார். மாநிலத்தின் எந்த உரிமை பறிக்கப்பட்டாலும் கவலைப்படாமல் தில்லியின் கைப்பறையாக(ஜால்ராவாக)த் தமிழக அரசியலை மாற்றவரிந்து கட்டிக்கொண்டுநிற்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்கம், நாணயம், உழைப்பு, ஈகம்(தியாகம்) என்பவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிக் கவர்ச்சி, அடிதடி, காக்காய்ப்பிடி குணங்களுக்கே முகாமை கொடுத்துத் தமிழக அரசியலையே சாய்க்கடையாக்கி வருகிறார்.

இதற்கும் மேலாக உடன்பிறந்தே கொல்லும் நோய்போன்று, தமிழகத்தில் வாழ்ந்து கொண்டே அனைத்துத் துறைகளிலும் தமிழகத்திற்குக் குழி பறிக்கும் ஒரு கூட்டம் செயலலிதாவை முதலமைச்சராக்கி விட்டே மறுவேலை பார்ப்பது என்று முடிவுகட்டி வேலை செய்கிறது.

ஆகவே, அத்தீமையை அப்புறப்படுத்துவதும், அது வளர்ந்து விடாமலிருக்க வகை செய்வதும் தமிழகத்தின் நலன் நாடும் அனைவரின் முதற் கடனாகும். —நன்றி; 'எழுகதிர்.' செ.' 89.

# பொழிலா... முகிலா...

போராளிப் பிள்ளைகளே,
புயலான எண்ணங்களே!

நூலாகி நம் அன்னை
நூறுமுறை செத்துவிட்டாள்;
ஆனாலும் விடுதலையை
வழங்கிட மக்களிங்கே
இருக்கின்றார் என்பதாலே
செருக்குடனே அன்னையுமே
உலவுகிறாள் அறிவீர்கள்;
உங்களுக்கென வாழ்த்துகளே!

ஒருமுறை சிறைப்பட்டீர்
உடைத்துலகம் கண்டு விட்டீர்;
மறுமுறை புகாதவர்கள்;
மனச் சிறையில் போய் வருவீர்!

அடிமைகளாய் வாழ்ந்திட
ஒரு போதும் ஒப்பிடாத
உரிமைக் குரல் ஒடுக்கிடவே
இருப்புக் கம்பி யுள்போட்டார்;
வெளிப்படநீர் எண்ணிவிட்டால்
விடும் மூச்சு அனல்போதும்
கம்பிகளும் உருகிவீழும்!

தம்பிகளே, கட்டத்தினை
மதிக்கின்ற மக்களுக்கு
மதிப்பதாலே வரும்பிழையை
விளைவேற்று விளக்கிவிட்டீர்;

வெடிக்கின்ற எரிமலைக்கு
ஒரு மூடி போடுவதார்?

வரும்புரட்சிக் காலமிதை
விழி முகிலில் காணுகவே;
பொழிலாகும் தமிழ்நிலமே!

—பறம்பை அறிவன்.

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

# இராசீவ் காலம் ஊழல் காலம்!

## எச். கே. பராஞ்சபை

இராசீவ் பதவிக்கு வந்ததும் அரசியல் நிலைமை படிப்படியாக மேலும் மேலும் கீழ்மை அடைந்துவிட்டது. 1974-75-இல் இந்திரா காலத்தில் இருந்ததை விடவும் இப்போது மிக மிக இழிவடைந்து விட்டது.

அரசின் எல்லா நிலைகளிலும் கையூட்டு ஊழல் பரவியிருப்பதும், கருப்புப பணத்தை அரசியல் கட்சிகள் பயன்படுத்துவதும் இதற்குக் காரணங்கள். தொழில்-வணிகத் துறையினர் மீது ஏற்பட்ட வெறுப்புக் காரணமாக, தொழிற் குழுமங்கள் (கம்பெனிகள்) அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதற்கு நாடாளுமன்றம் தடை போட்டது. எல்லா அரசியல் கட்சிகளும் இதை உண்மையாக ஏற்றுக்கொண்டு, அரசியல் கட்சிகளின் செலவுக்குச் சட்ட முறையிலான மாற்று வழிகளை வகுத்திருந்தால், இந்தியக் குடிநாயகம் நலமுடன் வளர்ந்திருக்கும். ஆனால், ஆளும் கட்சியான இந்திரா பேராயக் கட்சியே 1970-71-ஆம் ஆண்டுத் தேர்தலுக்காகப் பெருமளவில் பணமாகவே நன்கொடைகளைத் தண்டத் தொடங்கியது.

அப்பொழுது முதல் இந்த வழக்கம் நீடித்து இருந்து வருகிறது. தொழில் வணிக நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக ஆளும் கட்சிக்குக் கருப்புப் பணத்தை நன்கொடையாகக் கொடுக்க வேண்டியிருப்பதால், அவை கருப்புப் பணத்தைச் சம்பாதிப்பதும் புனிதமானதாகி விட்டது. அரசு தன்னுடைய அதிகாரங்களைத் தவறான வழிகளில் செலுத்துவதற்கும் இ'து ஊக்கமளித்திருக்கிறது.

1980 முதல், அரசின் கொடுக்கல் வாங்கல் பேரங்கள் மூலம் பொருள் திரட்டும் எளிதான முறை பழக்கத்துக்கு வந்தது. முன்பெல்லாம் அரசின் உள்ளாளுமை, மற்றும் படைத்துறை ஒப்பந்தங்களின் அதிகாரங்களில் அதிகாரிகள் மாத்திரமே கையூட்டுப் பெறுவது வழக்கம். முன்பெல்லாம் மிக அரிதாகவே அமைச்சர் எவரும், குறைந்த அளவில் நடுவணரசு அமைச்சர் எவரும், ஊழலில் தொடர்பு கொண்டதாக ஐயம் ஏற்பட்டதுண்டு. ஆனால், இப்பொழுதோ கட்சி பொருள் திரட்டுவதற்கு இதுவே அரச பாதையாகி விட்டதாகத் தோன்றுகிறது.

அரசின் அலுவல்களில் எத்தகைய ஊழல் காணப்படுகிறது என்பதற்கு போஃபர்சு சிக்கல் ஓர் எடுத்துக்காட்டு. இந்தச் சிக்கலில் தலைமையமைச்சருக்குச் சொந்த முறையில் தொடர்பில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், கையூட்டுப் பெற்றவர்களின் பெயர்கள் வெளிவராமல் தடுப்பதற்கு அரசும் ஆளும் கட்சியும் ஏன் அனைத்துத் தந்திரங்களையும் கையாள்கின்றன என்பதுதான் விளங்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தேர்தல் மூலம் பதவிக்கு வரும் அரசியல்காரர்களோ, அதிகாரிகளோ, நேர்மையைக் கடைப்பிடிப்பதைத் தங்கள் கடமையாகக் கருதுவர் என்று எதிர்பார்க்க முடியுமா?

— நன்றி. **தினமணி** 30-9-89.

---

## புதிதாகத் தோன்றியுள்ளது தமிழர் கழகம்!

சென்ற 17-9-1979 சென்னை தியாகராயநகர் வெங்கடேசுவரா திருமண மண்டபத்தில் வழக்கறிஞர் **சோதிப் பிரகாசம்** தலைமையில் தொடங்கப்பட்ட **தமிழர் கழகம்** கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

1. காசுமீரத்தில் வெளிமாநிலத்தவர் வீடு, நிலம் வாங்கத் தடைச் சட்டம் இருப்பதுபோல் தமிழகத்திலும் சட்டம் இயற்றுதல் வேண்டும்.
2. ஆட்சித்துறை, அறத்துறை, கல்வித்துறை முதலியவற்றுள் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் தமிழை அமர்த்துதல் வேண்டும்.
3. இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பது போல, தமிழ் ஆட்சிமொழியாகவும் அமர்ந்திட அரசியல் சட்டத்தைத் திருத்துதல் வேண்டும்.
4. தமிழ்நாட்டில் தொழில் தொடங்க தமிழர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்குதல் வேண்டும். அயலவர்கள் நடத்தும் தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்துதல் வேண்டும்.
5. ஈழத்தமிழர்களுக்கு எதிராக இந்தியப் படை எடுக்கும் நடவடிக்கையை உடனே நிறுத்துக.
6. ஆளுநர் ஆட்சியில் தடுப்புக் காவலில் சிறையில் அடைத்த அனைத்துத் தமிழ் உணர்வாளர்களையும் உடனே விடுதலை செய்தல் வேண்டும். போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை உடனே திரும்பப் பெறுதல் வேண்டும்.

(பின் குறிப்பு: இவ் வியக்கம் தொடர்பாக அறிந்து கொள்ள விரும்புபவர்கள் திரு. **சோதி பிரகாசம்** வழக்கறிஞர், அமைப்பாளர் **தமிழர் கழகம்**, 43. அப்பர் சாமி கோயில் தெரு, சென்னை-4 என்னும் முகவரியில் தொடர்பு கொள்க.)

Scanned with CamScanner

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல் : 15 மதுரை, நடுவண் சிறை. 4-2-89

பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கங்கள்,

தங்களின் பணி அழுத்தம் தங்களுக்கு ஓய்வின்மையைக் கொடுத்ததாலே, மடல் எழுத நேரம் தங்களுக்கு இருந்திருக்காது என எண்ணி அமைகிறோம். நாங்கள் இங்கு நலமுடன் உள்ளோம்.

சென்ற கிழமை 'தென்மொழி' (சு: 24: ஓ 9) வந்தது. சிறப்புடன் அட்டைப் பாடலும், ஆசிரியவுரையாக எழுதப் பெற்ற கட்டுரையும் இருந்தன. இங்கு பலரிடமும் காட்டிப் படிக்க வைத்து மகிழ்வுற்றோம். 'கனிச்சாறு' குடித்த பலர் இங்கு மயங்கி, மிகு புகழுடன் கூறினர். என் உளமெலாம் அவர்கள் கூறுகையில் மிகு மகிழ்வாகவும்—அத்தகைய பெருமையுடைய தங்களின்மீது கிடக்கின்ற பணி அழுத்தங்களை எண்ணிக் கண்ணீரும் விட்டுக் கொண்டும்-உள்ளேன். என் செய்ய?

எல்லாம் நல்ல முறையில் முடியும் என நம்புகிறோம். தாங்கள் உந்து ஏறிச் சென்று, அச்சக, அலுவலக, இதழியல் பணிகள் அனைத்தையும் எடுத்துச் செய்து கொண்டுள்ள நிலைக்கு, ஏதோ ஒரு வகையில் ஒரு சிறு துரும்பெனத் துணை நிற்க வருகிற அன்பர்களை மிகவும் பாராட்டுகிறோம்... விரைவில் தங்களின் அருந்தமிழ்த் தொண்டிற்கு முழுமையாகத் துணைநின்று பணியாற்றுகிற நாளை எண்ணி மகிழ்ந்து கொண்டுள்ளோம்.

தங்களின் அறிவு சார்ந்த மடலை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றோம்.

அன்பு மகன்
பொழில்.

அன்புள்ள அம்மா,

தாங்களும், தேனும் எழுதி 1-ஆம் பக்கல் அஞ்சலிலிட்ட மடல் கிடைக்கப் பெற்றேன். தங்களிடமிருந்து மடல் வரும் வரும் என எதிர்பார்த்து, நேற்று மாலையே மடல் வந்தது...தேன் புதுவை திரும்பியிருப்பாள். நீங்கள் எப்படியுள்ளீர்கள்? உடல் நலனை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். மூட்டு வலி எப்படியுள்ளது. அப்பா அவர்களின் உடலை நன்கு பேணுங்கள். அக்கா எப்படியுள்ளாள். ஏன் யாரும் மடலே எழுதுவதில்லை.

இங்கு நாங்கள் சமைத்து உண்பது மிக மகிழ்வாக உள்ளது எனத் தாங்கள் எழுதியிருந்தது நிறைவாக உள்ளது. உண்மையில் நிறைவுடன் மகிழ்வாகச் செய்து உண்கிறோம். ஆனால் பிற பணிகள் படிப்பது, போன்றவைதாம் ஓரளவு தடைப் படுகின்றன. இரவில் நன்கு தூக்கம் விரைந்து வந்து விடுகிறது. ...

அம்மா, கிழமைக்கு ஒரு முறை மடல் எழுதுங்கள். ஓய்வாக இருக்கையில் பழைய **தென்மொழி**யை எடுத்துப் படியுங்கள். இன்னொரு நல்ல பணி! ஒரு சுவடியை எடுத்து, அப்பா அவர்களைத் தாங்கள் திருமணம் செய்து கொண்டு, தென்மொழிக் குடும்பம் வளர்ந்து வந்திருந்த காலங்களில், என்ன என்ன மகிழ்வான, துன்பமானசெய்திகள் நடந்துள்ளனவோ, அனைத்துச் செய்திகளையும் (தங்களுக்கு நினைவுள்ளவற்றை) எழுதி வையுங்கள். எதிர்காலத் தலைமுறைக்கு அது நிறைய பயன்படும்; தவறாது செய்யுங்கள்.

பிறை! என்ன செய்து கொண்டுள்ளாய்? ஒவ்வொரு கிழமையும், ஏதேனும் ஒரு நூலைப் படித்து அதைப் பற்றிய கருத்தை எழுது. இப்பொழுது வீட்டில் அமைதியாக இருக்கிற ஓய்வு நிறைய செயல்பட வைக்கும். செம்மல் பிற பிள்ளைகளுக்கு

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

---

(7- ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனி அமைச்சர், தன் மதிப்புத் (சுயமரியாதை) திருமணச்சட்டம் 1967-இல் ஏற்றப்பட்டது. இந்தித் திணிப்பை எதிர்த்துப் பள்ளிகளில் இந்திப் படிப்பை 1968-இல் பாடத்திட்டத்திலிருந்து நீக்கியது; இருமொழி திட்டம் கொண்டு வரப்பட்டது. 1970-இல் அனைத்துச் சாதியினரும் பூசகராகும் (அர்ச்சகராச்) சட்டம் (இச்சட்டத்தை பார்ப்பனர் வழக்குமன்றஞ் சென்று நிறுத்தி வைத்துள்ளனர்.) போன்ற தமிழர் நலன்களைக் காக்கும் சட்டங்களைக் கொண்டு வந்தனர்.

இவ் வகையான பல நன்மைகளைத் தமிழர்களுக்குச் செய்தனர். இதனால் சினங்கொண்ட வடவர் 1976-இல் தி.மு.க. ஆட்சியைக் கலைத்தனர். வடவருக்குக் கட்டுப்பட்ட ஆட்சியாக இருந்தாலும், தமிழர்கள் தனிநாட்டு ஆட்சியை விரும்பி ஏமாறியவர்கள், மாநில ஆட்சியையாவது தமிழர் ஆளுகிறார்களே என மகிழ்ந்து போற்றியதில் தவறில்லை. 1967க்கு முந்தி தமிழகத்தை ஆட்சிப் பொறுப்பில் வைத்திருந்த வடவர் கட்சியாகிய பேராயக் கட்சியை மோப்பம் பிடிக்க விடாதபடி செய்து வருவது திராவிடர் அரசியற் கட்சிதாம் என்பதை மறந்து விடக் கூடாது. பேராயக் கட்சி ஆண்டாலும் அல்லது வடவர்கள் எவர் ஆண்டாலும் கொடுமைகள் இப்போது இருப்பதை விட மிகுதியாகவே இருக்கும் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். திரு. அமிழ்தன் குடமுருட்டியில் குண்டு வெடிப்பது அணுகுமுறை உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கு எதிரானதே ஆகும். என்று சொல்வது அவர் தமிழ்நாட்டு உரிமைப் போராட்டத்தை விரும்பவில்லை என்ற ஐயத்தை உண்டாக்குகிறது. (தொடரும்.)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்க முடியாமல் இங்கு சொல்லப்படும் கட்சிகள் தவிக்கின்றன!

ஒருகால், நாராயணசாமி தலைமையில் நடந்த உழவர் எழுச்சியை, 'நாயுடு சங்கம்' என்றும், 'அமெரிக்க முகவர் வேலை'யென்றும், 'பெரும் பணக்கார வேளாண்மையாளர் அமைப்பு' என்றும் கூறிப் புறக்கணித்தவர்கள் இன்று 'ஆற்றல்மிக்க அமைப்பு இல்லையே' என்கின்றார்கள்'

தமிழகத்தில் — மற்ற பகுதிகளில் தன்னெழுச்சியுடன் தோன்றி எழுந்துள்ள உழவர் போராட்டங்களைத் திரட்டிய சிக்கல்கள் — அரசியல் பற்றி இவர்கள் ஆராய்ந்தார்களா என்பது ஐயமே! அப்படி ஆய்வு செய்திருந்த போதும் அமைப்பாக்க' முடியாமல் போனதேன் என்பதை உண்மையுணர்வோடு ஒப்புக்கொண்டு, செயல்படவில்லை என்றே துணியலாம்!

### 4: அங்கு இங்கு எனுதபடி,..?

தமிழினம் பற்றிய செய்திகளை அறிவதும், அதன் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகளைப் பாராட்டுவதும், அதன் பின்னடைவு கண்டு வருந்தி மாற்றுத் தேடுவதும் நம் கடமையாகும். அந்த வகையில், நம் சிந்தனை முடுக்கம் பெறுவதாகுக.

அங்கே அவன் இப்படி...இங்கே இவன் அப்படி...என்று 'பேதலித்து' நிற்காமல், எங்கிருந்த போதும் 'அவன்' தமிழன்! எனவே, நாம் நம்மையறிய மனந்திறந்த ஆய்வின் மூலம் 'கண்டு முதல்' என்னவென்று கணக்குப் பார்ப்போம்.

'பட்டுக்கோட்டை'யைப் 'பாட்டுக் கோட்டை' என்று பாராட்டியவரும், அவரைப் 'பொதுவுடைமைப் பாவலரா? 'என வினு வெழுப்பி, 'இல்லை' என்று முடிவுக்கு வந்தவரும் உண்டு. 'புரட்சி', நேர் கோட்டில் நடைபெறுவதில்லை. பாவலன் தன் ஆற்றலுக்கேற்ப 'நேர்திசை' ஓடி, முட்டி மோதி, விலகி மீண்டும் தன்னை வலிமை செய்து கொண்டு, நேர்திசை நோக்கிப் பாய்தல் வேண்டும். அத்தகைய இயங்கியலறிவுடைய பாவலர் ஒருசிலரே உண்டு.

'இன்குலாபும்,' சேரனும் வகுப்புப் போர்க்குரலை எழுப்பி வருகின்றனர்.

'பாவலரேறு', இனவூடாக உழைக்கும் மக்களைச் சார்ந்து பாட்டெழுதி வருகின்ருர். மக்களிடையே பல்கிப் பெருகி வரும் சிக்கல்கள்—இயக்கங்களைச் சிதறச் செய்த போதும், பொதுமை உணர்வும், இனவிடுதலைச் சிக்கலை அறுக்கும் தீவிரமும் கொண்டு இத்தகைய முயற்சிகளில் ஈடுபெறுகின்றவரை நாம் அங்கங்கே கண்டு வருகின்ருேம்.

தனிமாந்த வளர்ச்சி அப்படியொன்றும் எளிதான தன்று. குமுகாய வளர்ச்சியின் தடைவிடைகள், அத் தனிமாந்த முன்னேற்றத்தின் தன்மைக்குள் சாரமாக அமைந்திருக்கும்!

### புலவர் தீரன் இறந்தார்!

திருப்பரங்குன்றம் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியர் புலவர் தீரன். 432 மணி நேரம் தொடர் பேச்சு மூலம் 'உலக ஆற்றலர்' பட்டியலில் இடம் பெற்றவர். ஆயிரத் தெட்டு மணிநேரம் பேசிப் 'பெரும் பேச்சாளர்' ஆக ஆர்வம் கொண்டிருந்தவர். பழங்கானத்தம் சாலையில் மிதிவண்டியில் போய்க் கொண்டிருந்த போது, சரக்குப் பேருந்து மோதி இறந்து போயிருக்கிருர். இவர் 'பழம்' புராணங்களை விரித்து; விரித்துப் பேசியிருக்கிருர்!

தமிழினத்திற்காக, விடுதலைக்காகப் 'பேச', இந்த மக்களும் சரி, அரசும் சரி 'இடம்' தருமா? 'இட்டளி உண்ணும் போட்டி'த் திறனுக்கும் தீரனின் தொடர் பேச்சுத் திறனுக்கும் என்ன வேறுபாடிருக்க முடியும்?

சாவு இயற்கையாகவுள்ளது. அவர் 'திறன்,' குமுகாய மலர்ச்சிக்குப் பயன்படாமல் போனது. நாக்கிஞலேயே, சாலை, தெருக்களைத் துப்புரவு செய்ய முயல்கிறவர்கள் இவர்கள்! இப்படிப்'பட்டவர்களின் 'திசைதவறுதலால்' தமிழினத்திற்கு இழப்பு கூடுதலாகி விடுகிறது!

"பட்டறையில் சம்மட்டி
அடி வாங்கி — என்
பாடலது மின்னலென
இடி முழக்கம்!"

"போலிகளை வேரோடு
களையெடுக்கும் — விளைவைப்
பொதுவாக்க முன்னின்று
படிபெடுக்கும்" —மனஓசை சூலை-89.

என்கிற 'கோமகன்' பாட்டிலொரு நோக்கம் உளது. இத்தகைய 'தீரன்களை'ப் பிறப்பிக்கும் நம் மண்! அந்த 'வீர விளைவை' மறந்து போக முடியாது! போலிகளின் 'வெளிச்சம்,' கருவறைக்குள் உருவாகியுள்ள புரட்சி விடியலை இருட்டடிப்புச் செய்திடல் இயலாது! O

---

## போராளிகள் நிலை!

தமிழக விடுதலைப் போராளிகள் **பொழிலன்**, **முகிலன்** அவர்களின் பிணையல் வழக்குகள், கீழ் வழக்கு மன்றத்திலும், கோவை மேல் வழக்கு மன்ற முறையீட்டிலும் தள்ளுண்டு போனது. இனி, இது, சென்னை உயர்நெறி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

[illegible] மிக, இன்றியமையாதது. 'ஒவ்வொரு நொடியும் வாழ்வது வாழ்க்கை' என்று அப்பா அவர்கள் எழுதியது போல், நம் வாழ்வு ஒவ்வொரு நொடியிலும் உள்ளது. ஆக, ஒவ்வொரு நொடியையும் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளைக்கு ஒருமுறை நாம் உடலால் மட்டும் வளர்வதான நிலை இருத்தல் கூடாது; அறிவால் நாம் வளர்தல் வேண்டும். அதுதான் உண்மை வளர்ச்சி. உடல் வளர்ச்சி ஏற்ற இறக்கத்தைக் கொண்டது; சூழலுக்கு ஏற்ப மாற வல்லது. உள்ள—அறிவு வளர்ச்சி, சூழலில் வளர்க்கப் பெறுவது; எனவே அதுதான் இன்றியமையாதது. நாமும் ஒரு மாந்தன் என்பதைவிட, நாம் ஒரு மாந்தன் என்கிற நிலையில் நாம் வளர்தல் வேண்டும். பிறர் நம்மைப் பின்பற்றத் தக்கவராய்-எடுத்துக்காட்டாகக் கூறப்பட வேண்டியவராய்-நாம் நிற்றல் வேண்டும். அதற்கு அறிவு தேவை. அப்பா அவர்களின் ஆலமர அறிவில் நாம் அனைவரும் கீழ் விழுந்த சருகுகளாக இன்றைக்கு உள்ளோம். மாருக—மரத்திற்குத் துணையாக விழுதுகளாக இல்லாமற் போனோம். இனிமேலேனும் அதை உணர்ந்து செயல்படுவோம். அக்காவிற்கும் இதைக் கொடுத்துச் சொல்! இதைப் பற்றிப் பேசுங்கள். பிற பேச்சுகள் எல்லாம் வெறும் காற்றுகளே! அவை கரைந்து போகும்! இப் பேச்சை ஆக்க முறையில் செயலாக்குவோம். மடல் எழுது. பிறபின்.

அன்பு, **பொழில்.**

## மக்களைக் கிளர்ந்தெழச் செய்க!

அன்புள்ள பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். **தமிழ்நிலம்** 127-இல் **பொழிலன், முகிலன்** ஆகியவர்களை மீண்டும் கோவைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள செய்தியை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

இந்தி(ய)அரசு மாநிலங்களின் அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்தும், மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கவே இப்படிப்பட்ட முயற்சிகள் என்றும் பொய்ச் செய்திகளை மக்களிடம் பரப்பியும் வருவதை நாம் அறிவோம். **தமிழக அரசு இதனை நன்கு அறிந்தும், சரியான உறுதியான எதிர்ப்பை இன்னும் தெரிவிக்கவில்லை.** நடுவணரசின் கொடுமைகளைச் சுட்டிக் காட்டி அதிகார வல்லாண்மையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட சூழலில் நடுவணரசின் கொடுமைகளை எதிர்க்கும் தமிழக இளைஞர்களை அடக்குவதற்குக் கொடுங்கோலாட்சி செய்யும் கடுமையான நடவடிக்கைகளைத் தமிழக அரசு தடுக்கும் என்ற எண்ணம் வேண்டாம்.

எனவே நாம் எழுதிக் கொண்டிருப்பதால் மட்டும் இக்கொடுமைகளையும், ஞாயமற்றச் செயல்களையும் கண்டித்துவிட முடியாது. விரைவில் மக்களைச் சந்தித்து இரு அரசுகளும் செய்து கொண்டிருக்கும் கொடுமைகளை மக்கள் உணரச் செய்யவேண்டும். மக்கள் ஆட்சி நாட்டில் மக்களே கிளர்ந்தெழ வேண்டும். அதற்கான திட்டங்களைத் தமிழ் மாநில விடுதலை உணர்ச்சியுள்ள இயக்கங்களை ஒன்றிணைத்துப் பரப்பும் பணியைத் தொடங்குங்கள்.

அன்புள்ள, **—அதியமான்**, தாழையூற்று.

**த.மு.க.வின் உயர்த்த கொள்கைகள்!**

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமனிலைக் குமுகாயம்!
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு • 46**

தகைய புரட்சிக்கும் வரலாறே அடிப்படையானது; எனவே, வரலாற்றை [illegible]ர்த்தாமல் மக்களைப் புரட்சிக்கு அணியப்[illegible]த்த முடியாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 129.

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு: 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 637